Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror


www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 30, 2021

புதன்கிழமை ஜூன் 30, 2021 | ஒளி: 07 கதிர்: 35 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

டெல்டா கொரோனா பிறழ்வு:


## கொழும்பில் மேலும் மூவர் சிக்கினர்



இந்தியாவில் பரவிவரும் கொரோனா வைரஸ் டெல்டா பிறழ்வு தொற்றுக்குள்ளான மேலும் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ‘கடை கொரோனா கைகளில் தவழ்கிறது’



மேல் மாகாணத்தில் ஆடை அணிகலன் வர்த்தக நிலையங்கள், வணிக வளாகங்கள் ஆகியவற்றைத் திறப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், பல இடங்களில் அவ்வாறான கடைகளும் வளாகங்களும் திறக்கப்பட்டு, வணிகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக, பாரிய கொரோனா அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன என மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், டொக்டர் தம்மிகா ஜயலத் தெரிவித்துள்ளார்.

“இவ்வாறான ஆடை அணிகலன் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவற்றை முற்றாக மூடிவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதுதொடர்பில் மாகாண சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்” என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிக்கு

## 15 மாத சிறை



தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஸூமாவுக்கு அந்நாட்டு அரசியலமைப்பு நீதிமன்றத்தால் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் 15 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் விவகாரம் குறித்த விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதைத் தொடர்ந்து அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்த ஜேக்கப் ஸூமாவின்

தொடர்ச்சி P2

## நள்ளிரவில் சுற்றித்திரிந்த மூவரும் நாடு திரும்பினர்

### 14 நாள்கள் தனிமைப்படுத்த ஏற்பாடு



இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களான குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்க, நிரோஷன் டிக்வெல்ல ஆகியோர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நேற்று (29) நாட்டை வந்தடைந்தனர்.

இவர்கள் மூவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) இரவு லண்டன், டர்ஹமில் உள்ள வீதிகளில் சுற்றித் திரியும் வீடியோ, திங்கட்கிழமை (28) சமூக ஊடகங்களில் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது.

தொடர்ச்சி P2

பசிலின் மீள் வருகை குறித்தான

## ‘ஊகங்களுக்கு பதிலளிக்க முடியாது’

■ மகேஸ்வரி விஜயனந்தன்



பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு வருகிறாரா, அவருக்கு அமைச்சுப் பதவி தரப்படுகின்றதா என்பது கட்சியின் உள்ளக விடயம் எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, உத்தியோகபூர்வமாக தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர், உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பசில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவது பொற்காலமாகும் என பின்வரிசை உறுப்பினர்கள் தெரிவிப்பது குறித்து, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எதிரணியினருக்கு

## ‘பசில் பயம்’



“கொரோனா வைரஸ் தொற்றைவிட பசில் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசத்தைக் கண்டு எதிரணியினர் அச்சம் கொண்டுள்ளார்கள்” எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அவரின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

விலையேற்றத்தைக் கண்டித்து

## யாழில் சைக்கிள் பேரணி



■ எஸ்.நிதர்ஷன், எம்.றொசாந்த்

பெற்றோல் விலையேற்றம், தமிழ் மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணத்தில், நேற்று (29) காலை, கண்டன சைக்கிள் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பமான இந்தச் சைக்கிள் பேரணி, மானிப்பாய் பிரதேச சபை முன்றல் வரை சென்று நிறைவடைந்தது.


வடக்கு மீனவர் சமாசம், மானிப்பாய் பிரதேச சபை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன், வட மாகாண சபையின்

தொடர்ச்சி P2

தங்கம் வென்று

## இலங்கை வீரர் சாதனை



இந்தியாவின் பாட்டியாலாவில் நடைபெறும் இந்திய மாநிலங்களுக்கு இடையிலான 60ஆவது தேசிய மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை வீரர் காலிங்க குமாரகே தங்கப் பதக்கம் வென்றார்.

நேற்று முன்தினம் (28) நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய காலிங்க, போட்டியை 45.73 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை தனதாக்கினார்.

400 மீற்றர் போட்டி வரலாற்றில் இலங்கை வீரரொருவரால் பதிவு செய்யப்பட்ட நான்காவது அதி சிறந்த நேரமாகவும் இது இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாவி புனரமைப்பில் ஈடுபட்டிருக்கும்

## ‘சீனர்களின் ஆடையில் தவறில்லை’

### சீன இராணுவ ஆடை இல்லையென தெரிவிப்பு

■ மகேஸ்வரி விஜயனந்தன்



திஸ்ஸமஹாராம வாவியில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனர்கள், எமக்குத் தெரிந்த வரை இராணுவத்தினர் அல்லர் எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, எமது குற்ற விசாரணைப் பிரிவின் விசாரணைக்கமைய, அந்த ஆடை சாதாரண ஆடை என அறிக்கையிடப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன், சில நேரங்களில் வாகனம் திருத்தும் இடங்களில் பணிபுரிபவர்கள் இவ்வாறான நிறத்திலான ஆடை அணிந்திருப்பர் எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘இவர் சீனர் அல்லர்; முஸ்லிம்’

### அங்கஜன் விளக்கம்; சுமந்திரன் வருத்தம்

■ எம்.றொசாந்த்



பருத்தித்துறை- மருதங்கேணி வீதி புனரமைப்பு பணியில் சீனப் பிரஜை ஒருவர் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தனது டுவிட்டரில் படமொன்றை பதிவேற்றியிருந்தார்.

அதில் யாழ்ப்பாணத்தில் பல இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்ற நிலையில், அவர்களுக்கு ஏன் இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை என, கேள்வியும் எழுப்பியிருந்தார்.

எனினும், அந்தப் புகைப்படத்தில் இருப்பவர் சீனப் பிரஜையல்ல எனக் குறிப்பிட்டுள்ள குழுக்களின் பிரதித் தலைவரான

தொடர்ச்சி P2

## பழைய சீனில் மாலா சடலமாக மீட்பு

### அயல் வீட்டு இளைஞனிடம் விசாரணை

■ நீலமேகம் பிரசாந்த், ஆ.ரமேஸ், எஸ்.கண்ணன்



பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய சீன் தோட்டத்தில், சரமாரியான வெட்டுக்காயங்களுடன் துணியால் சுற்றப்பட்டிருந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம், அவரது வீட்டின் சமையலறையில் இருந்து, நேற்று (29) மீட்கப்பட்டுள்ளது.

இரு பிள்ளைகளின் தாயான மாலா எனும் 37 வயதுப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## கைவிலங்குடன் மிதந்தது மந்திரவாதியின் சடலமாகும்

### பெண் உள்ளிட்ட மூவர் கைது



சங்கிலியால் கைகள் கட்டப்பட்ட நிலையில் களனி கங்கையில் மீட்கப்பட்ட சடலம், 54 வயதுடைய மந்திரவாதி ஒருவருடையது என இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்நபருடன் தகாத தொடர்பு வைத்திருந்த பெண், மற்றுமொரு நபருடன் கொண்டிருந்த முறையற்ற உறவு

தொடர்ச்சி P2

## பாக்கு கடும் ‘துவர்ப்பு’



நாட்டில் தற்போது பாக்கின் விலை 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாக்குகளைப் பறிப்பது குறைந்துள்ள காரணத்தால் பாக்கின் விலை அதிகரித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் சில பிரதேசங்களில் பாக்கு ஒன்று 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும், அதன் காரணமாக வெற்றிலைக் கூறொன்றின் விலையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## ‘அஸ்ட்ராசெனெக்கா செலுத்தியோர் சைனா:ஃபார்ம் செலுத்த வேண்டாம்’

■ மகேஸ்வரி விஜயனந்தன்

முதலாவது டோஸாக அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசி செலுத்திக்கொண்டோர், இரண்டாவது டோஸாக சீனாவின் சைனாஃபார்ம் செலுத்திக்கொள்ள வேண்டாமென்று, பொதுச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற இணையவழி ஊடான ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘கடை கொரோனா கைகளில் தவழ்கிறது’

தடைகளையும் மீறி திறக்கப்பட்டிருக்கும் இவ்வாறான வர்த்தக நிலையங்களுக்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கும் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய தம்மிகா ஜயலத் கொண்டு சென்றுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கொரோனா தொற்றுப் பரவுதலை கவனத்தில் கொண்டு, மேல் மாகாணத்திலுள்ள ஆடை அணிகலன் வர்த்தக நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்கள் ஆகியன திறப்பதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தடை செய்யப்பட்டு, விசேட வழிகாட்டியின் ஊடாகவும் அண்மையில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நள்ளிரவில் சுற்றித்திரிந்த மூவரும் நாடு திரும்பினர்

இதனைய அடுத்து அவர்கள் மூவரையும் உடன் அமுலுக்கு வரும் வகையில் அணியிலிருந்து இடை நிறுத்திய இலங்கை கிரிக்கெட் சபை, அவர்கள் மூவரையும் உடனடியாக நாட்டுக்கு வருமாறு அறிவித்திருந்தது.

அத்துடன், இந்தக் கிரிக்கெட் வீரர்கள் உயிர்க்குமிழி (பயோ பபுள்) விதிமுறைகளை மீறியுள்ளார்களா என்பதை அறிய இலங்கை கிரிக்கெட் சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் நாடு திரும்பிய 3 வீரர்களையும் நீர்கொழும்பில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் 14 நாள்கள் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## ‘பசில் பயம்’

கொரோனா தாக்கம், எரிபொருள் விலையேற்றம் ஆகிய விடயங்களை மறந்துவிட்ட எதிரணியினர், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசம் குறித்து அதிகம் கவலைப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசம் தொடர்பான தீர்மானம் கட்சியின் உள்ளக மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதுடன், இதனை பிற கட்சியினர் விமர்சிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்துள்ள தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த பசில் ராஜபக்ஷவின் ஒத்துழைப்பு அவசியமானதாக இருக்கும் என்றும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அவர் பாரிய ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டுக்கு பிறகு ராஜபக்ஷர்கள் ஆட்சியைக் கைப்பற்ற அவர் வகுத்த திட்டம் அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ள நிலையில், ராஜபக்ஷர்களைப் பிளவுபடுத்த எந்தச் சக்தியாலும் முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ‘சீனர்களின் ஆடையில் தவறில்லை’

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று(29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சீன இராணுவத்துக்கு ஒப்பான ஆடையை சீனர்கள் அணிந்திருந்தமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினரும் இராணுவத்தினரும் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் அதற்கமைய அந்த ஆடை, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உத்தியோகப்பூர்வ ஆடை மட்டுமே என உறுதியாகியுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் தும்மினால் கூட, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வார்கள், இங்கு சட்டம் மீறப்பட்டிருந்தால் முதலாவதாக வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும். சில தனியார் பாதுகாப்பு நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், இலங்கை கடற்படையினர் அணியும் சீருடையின் நிறத்தை ஒத்த சீருடைகளையே அணிகின்றனர் என்றார்.

யாரும் எந்த நிறத்திலான சீருடையை அணியலாம் என அர்த்தப்படுத்த தேவையில்லை, பதிவு செய்யப்பட்ட சில பாதுகாப்பு நிறுவனங்கள், ஆடை நிறங்கள் தொடர்பிலான அனுமதியை பாதுகாப்பு அமைச்சில் பெற்றுக்கொள்ளவேண்டும். சீனர்கள் அணிந்திருக்கும் அந்த சீருடையால் பிரச்சினையில்லை என்றார்.

## யாழில் சைக்கிள் பேரணி



எஸ்.நிதர்ஷன், எம்றொசாந்த்

## ‘ஊகங்களுக்கு பதிலளிக்க முடியாது’

தொடர்ந்து தெரிவித்த அவர், “பசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்துக்கு வருவது, எவ்வாறு வருகிறார், அவருக்கு என்ன பதவிகள் வழங்கப்படவுள்ளன என்பதெல்லாம் கட்சி ஒன்றின் உள்ளக விடயங்களாகும். அவற்றை உரிய முறையில் ஊடகங்களுக்கு அறிவிக்கின்றோம்” என்றார்.

“அத்துடன், அது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் சமூகத்துக்கு பெரிய அக்கறை உள்ளது. எனினும், என்ன நடக்கின்றது என்பதை அறிய, கட்சி தீர்மானம் எடுத்த பின்புதான் அறிவிக்க முடியும்.

“பசில் ராஜபக்ஷவுக்கு நிதி இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு இருக்கையில், இது எவ்வாறு உள்ளக விடயம் எனக் கூறுகிறீர்கள்?” என மற்றுமொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், “இது தொடர்பான தீர்மானங்களை எடுப்பவர் ஜனாதிபதியே. எனவே, ஊகங்களை அடிப்படையாகக் கொண்ட கேள்விகளுக்கு எம்மால் பதிலளிக்க முடியாது” என்றார்.

“நாம் உத்தியோகபூர்வமாக எவ்விதத் தீர்மானமும் எடுக்கவில்லை. அமைச்சரவையை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. அவர் அவ்வாறான தீர்மானத்தை எடுத்தவுடன் உரிய நேரத்தில் எமக்கு அறிவித்தவுடன், ஊடகங்களுக்கு அறிவிப்போம். தற்போது, உங்களது ஊகங்களுக்கு எங்களால் செயற்பட முடியாது” என்றார்

## ‘இவர் சீனர் அல்லர்; முஸ்லிம்’

அங்கஜன் ராமநாதன், அவர், இலங்கையர், இஸ்லாமிய சகோதரர், அவருடைய பெயர், மொஹமட் முஸ்தபா மொஹமட் ஹனீஃபா,

அக்கரைப்பற்று குதனாயில் திருமணம் செய்து, அம்பானில் குடியேறி, வீதித் திட்ட ஒப்பந்தக்காரரான என். எம் நிர்மாண பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரிகிறார் எனத் தனது டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

இந்நிலையில், அதற்குப் பதிலளித்துள்ள சுமந்திரன் எம்.பி, ‘இந்த நபர் சீன நாட்டவர் அல்லர்; இலங்கையர் என்பது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பிழைக்கு வருந்துகிறேன். வடக்கில் பணிபுரியும் பிற உண்மையான சீனர்களின் படங்கள் எதிர்காலத்தில் இடுகையிடப்படும்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சீனப் பிரஜை தொடர்பிலான டுவிட்டை சுமந்திரன் எம்.பி, நீக்கிக்கொண்டார். எனினும், சீனப்பிரஜை தொடர்பிலான சுமந்திரனின் அந்த டுவிட்டை படமெடுத்து பகிர்ந்துள்ளனர்.

இதனிடையே மற்றுமொரு பதிவை இட்டுள்ள சுமந்திரன் எம்.பி. ‘அந்த டுவிட், பொய்யானது என கண்டறியப்பட்டதன் பின்னர் அப்பதிவை நான், நீக்கிவிட்டேன். தயவுசெய்து புகைப்படம் எடுத்து இடுகையிட வேண்டாம்’என மற்றுமொரு ட்டுவிட்டை பதிவிட்டுள்ளார்.

## பாக்கு கடும் ‘துவர்ப்பு’

மெத தும்புர, குண்டசாலை, பன்வில ஆகிய பகுதிகளில் பாக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. எனினும், தற்போதைய காலநிலையால் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## கைவிலங்குடன் மிதந்தது மந்திரவாதியின் சடலமாகும்

காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று (29) கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடக பேச்சாளர், நவகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரணால பகுதியில் களனி கங்கையில் கடந்த 26ஆம் திகதி சங்கிலியால் கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சடலம், ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய மந்திரவாதி ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கமைய, மந்திரவாதியுடன் முறையற்ற உறவு வைத்திருந்த பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

சடலமாக மீட்கப்பட்ட மந்திரவாதியும் கைது செய்யப்பட்ட பெண்ணும் ஹங்வெல்ல பொலிஸ் பிரிவில் எம்புல்கம பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்துள்ள நிலையில், கடந்த 23ஆம் திகதி, இருவர் வீட்டுக்குள் புகுந்து மந்திரவாதியைக் கடத்திச் சென்றுள்ளதாகக் கைதுசெய்யப்பட்டுள்ள பெண், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும், பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், குறித்த பெண்ணுக்கும் கல்குவாரியில் வேலைபார்க்கும் எல்புல்கம பகுதியைச் சேர்ந்த சாரதிக்கும் இடையில் தகாத தொடர்பு ஏற்பட்டுள்ளமை காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளதாக ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, பனுவஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய சாரதியும், ஹோமாகம - பிட்டிபன பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய அவரது உறவினரான நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், கொலைக்குப் பயன்படுத்திய கத்தியல், மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஹங்வெல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றார்.

## கொழும்பில் மேலும் மூவர் சிக்கினர்

புதிதாக அடையாளம் காணப்பட்ட இம்மூவரும் கொழும்பு நகரில் நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதியொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூவரும் தற்போது கந்தக்காடு இடைத்தங்கல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 15 மாத சிறை

ஆட்சிக் காலத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், தீர்மானங்களை மேற்கொள்ளும் விடயங்களில் வர்த்தகர்கள் அரசியல்வாதிகளுடன் இணைந்து சதிகளில் ஈடுபட்டிருந்தார் எனவும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு ஒரு தடவை மாத்திரம் அவர் முன்னிலையாகியிருந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## யாழில் சைக்கிள் பேரணி

முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பழைய சீனில் மாலா சடலமாக மீட்பு

இந்தப் படுகொலைக்கு தனிப்பட்ட தகராரே காரணமாக இருக்கலாமென ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில், கொலையுண்ட பெண்ணின் பக்கத்து வீட்டில் வசிக்கும் 23 வயது இளைஞன், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், கொலையுண்ட பெண்ணின் கணவர் கொழும்பில் தொழில் புரிந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

பெண்ணின் சடலம், நாவலப்பிட்டி நீதவானின் மரண விசாரணைகளின் பின்னர், பிரேத பரிசோதனைக்காக நுவெரெலியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த பூண்டுலோயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ‘அஸ்ட்ராசெனெக்கா செலுத்தியோர் சைனா:ஃபார்ம் செலுத்த வேண்டாம்’

இந்த ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய தொற்று நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஆனந்த விஜேவிக்ரம, இலங்கையர்கள் இன்று தீர்மானம்மிக்க நிலையில் இருப்பதால், கொரோனா தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டதன் பின்னரும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் என்றார்.

தொடர்ந்துரைத்த அவர், “தடுப்பூசி மூலம் தொற்றால் ஏற்படும் அறிகுறிகளைக் குறைப்பதும் இதனால் ஏற்படும் மரணங்களைக் குறைப்பதும் செய்யப்படுகிறது. அதனால், தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட ஒருவர் ஊடாக மற்றுமொருவருக்கு தொற்றுப் பரவலாம் என்பதால், தடுப்பூசியை ஏற்றிக்கொண்டாலும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதைத் தவிர்க்க வேண்டாம்” என்றார்.

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கு 3, 4 வாரங்களுக்கு முன்னர் மக்கள் செயற்பட்ட விதமே காரணம் எனத் தெரிவித்த அவர், கர்ப்பிணிகள், 60 வயதுக்கு அதிகமானவர்கள், நீண்டநாள் நோய்வாய்ப்பட்டவர்கள், நோய் ஆபத்து வகையினராக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளனர் எனவும், அவர்கள் பாதுகாப்புடன் இருக்கவேண்டும் என்பதுடன், மேற்கூறப்பட்டவர்கள் வீடுகளில் இருந்தால், வீட்டிலுள்ளவர்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றார்.

நோய் எதிர்ப்புச் சக்தி உடலில் சிறந்த முறையில் இருக்க வேண்டுமாயின், உடலுக்குத் தேவையான உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது மாத்திரமின்றி, புகைப்பவராயின் புகைத்தலை நிறுத்துவது அவசியம் என தெரிவித்த அவர், N95 முகக்கவசமே மிகப் பாதுகாப்பானது என்றும் எனவே சர்ஜிக்கல் முகக் கவசத்தை முதலாவதாக அணிந்து கொண்ட பின்னர், இரண்டாவதாகத் துணியால் ஆன முகக் கவசத்தையோ அல்லது வேறு முகக்கவசத்தையோ அணிந்துகொள்வது சிறந்தது என்றார்.



## ஆலோசனை குழுவில் இருந்து நீலிகா மலவிகே இராஜினாமா

மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைகுழுவால் நியமிக்கப்பட்ட தடுப்பூசிகள் குறித்த சுயாதீன நிபுணர் ஆலோசனை குழுவில் இருந்து பேராசிரியர் நீலிகா மலவிகே நேற்று (29) இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மானுடவியல் மற்றும் மூலக்கூறு ஆய்வுகள் துறையின் தலைவர் பேராசிரியர் நீலிகா மலவிகே இராஜினாமா செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக, கொழும்பு வடக்கு (ராகம) மருத்துவ பீடத்தின் இணைப் பேராசிரியர் ஏ.பத்மேஷ், இந்தக் குழுவிலிருந்து இராஜினாமா செய்திருந்தார்.

குறித்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆனந்த விஜேவிக்ரம, பேராசிரியர் ரஜீவ டி. சில்வா, பேராசிரியர் காந்தி நாணயக்கார, பேராசிரியர் சன்ன ரணசிங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, பேராசிரியர் லக்குமார் பெர்ணான்டோ, வைத்தியர் ஹசித திசேரா ஆகியோர் உள்ளனர்.

உலகின் பல நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வரும் கொரோனா தடுப்பூசித் திட்டம், தடுப்பூசி குறித்த உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகள் குறித்து இந்தக் குழு ஆய்வு மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன், இலங்கையில் தடுப்பூசி வேலைத்திட்டத்தைப் பரிந்துரைக்கும் பொறுப்பினையும் இந்தக் குழு கொண்டுள்ளது.

போராடும் மக்கள்

# ‘குண்டர் குழுக்களால் தாக்கப்படுகின்றனர்’

அரசாங்கத்தின் ஊழல்களுக்கு எதிராக பொதுமக்கள் போராடும் போது, குண்டர் குழுக்களைக் கொண்டு பொதுமக்கள் தாக்கப்படுவதாகத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, பதுளை, ரிதிமாலியில் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில், குறித்த தவிசாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.



மக்கள் விடுதலை முன்னணியின் கட்சித் தலைமையகத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அநுரகுமார திஸாநாயக்க, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பதுளை, ரிதிமாலி பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற போராட்டத்தின்போது, பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்ட குழுவினர், பிரதேச சபை வாகனங்களில் வந்து போராட்டக்காரர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் ஊழல்கள் இருக்கும்போது, அதுதொடர்பில் நாட்டு மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கும்போது, குண்டர் குழுக்களைக் கொண்டு போராட்டக் காரர்களைத் தாக்குவதாகவும் இதன்போது அநுர குற்றம் சுமத்தினார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளருக்கோ அல்லது அந்தக் குண்டர் குழுவின் ஏனையோருக்கு எதிராகவோ பொலிஸார் இதுவரையில் சட்டநடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அவர்களுக்கு எதிராக உடனடியாகச் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

மூன்றாம் காலாண்டில்

# ‘தடுப்பூசிகள் அதிகமாகக் கிடைக்கும்’



இந்த வருடத்தின் மூன்றாவது காலாண்டில், இலங்கைக்கு தடுப்பூசிகள் கிடைப்பது கணிசமான அளவு அதிகரிக்குமெனத் தெரிவித்த இலங்கைக்கான உலக சுகாதார அமைப்பின் புதிய பிரதிநிதி கலாநிதி அலகா சிங்கை, இலங்கைக்கு உலக சுகாதார அமைப்பு தொடர்ந்து உதவிகளை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கான உலக சுகாதார அமைப்பின் புதிய பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கலாநிதி அலகா சிங்கை, வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று (29) சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலாநிதி சிங்கை இலங்கைக்கு வரவேற்ற அமைச்சர், 1952 ஆம் ஆண்டில் கொழும்பில் நிறுவப்பட்ட முதல் ஐ.நா நிறுவனமான உலக சுகாதார அமைப்புக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பை இதன்போது நினைவு கூர்ந்தார்.

கொரோனா தொற்று நோயின்போது, இலங்கைக்கு உலக சுகாதார நிறுவனம் அளித்த உதவியைப் பாராட்டிய அமைச்சர் தினேஸ், இலங்கை மக்களுக்கு கொரோனா தடுப்பூசிகளைப் பெறுவதில் தொடர்ச்சியான ஆதரவுகளைக் கோரியுள்ளார்.

இதேவேளை, உலக சுகாதார அமைப்பு தொடர்பில் இலங்கையின் ஒற்றுமையைப் பாராட்டிய கலாநிதி சிங், கொரோனா தொற்றுநோயை கட்டுப்படுத்துவதிலும், இந்தக் காலகட்டத்தில் ஏனைய சுகாதார சேவைகளின் நிலையான விநியோகத்தை உறுதி செய்வதிலும் உலக சுகாதார அமைப்பின் தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்தினார்.

கொரோனா தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்குதல், கொரோனாவுக்குப் பின்னரான மீட்புக் கட்டத்திலான உலக சுகாதார அமைப்பின் உதவிக்கு கலாநிதி சிங் உறுதியளித்தார். இந்த ஆண்டின் 3ஆவது காலாண்டில் தடுப்பூசிகள் கிடைப்பது கணிசமாக அதிகரிக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# ‘நாமலுக்கு பிரதமர் பதவி பொருத்தமானது’




அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர் எனத் தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப், பிரதமர் பதவியை நாமலுக்கு வழங்கும் பட்சத்தில் அதனை அவர் சிறப்பாகச் செய்வார் எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தற்போது அரசாங்கத்தில் உள்ள திறமையானவர். இளமையானவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இளைய தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் பட்சத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்தார்.

பிரதமர் பதவி என்பது, நாமலுக்கு முடியாத ஒன்றல்ல. அதற்கான கல்வித் தகைமை அவருக்கு உள்ளது. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பலம் நாமலுக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

முகக் கவசத்துக்கு பதிலாக

# ‘பேஸ் ஷீல்டை’ பயன்படுத்தலாமா?



முகக் கவசம் முகத்துடன் நன்கு பொருந்தும் நிலை மற்றும் முகக் கவசம், வைரஸ் கிருமிகளை எவ்வாறு வடிகட்டுகிறது என்பதைப் பொறுத்து, முகக் கவசத்தால் கிடைக்கும் உச்சபட்ச பயன் அளவு பாதுகாப்பு, தீர்மானிக்கப்படுவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஒருவருக்கொருவர் ஒரு மீற்றர் தூரத்தை பேணுவதற்குக் கடினமாக உள்ள சந்தர்ப்பங்களில் முகக் கவசத்துடன், பேஸ் ஷீல்டையும் பயன்படுத்துவதால், மற்றொரு நபரிடமிருந்து வெளிவரும் துகள்கள் உங்கள் முகத்தில் விழுவதிலிருந்து பாதுகாக்க முடியுமெனவும் அப்பணியகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில், சுகாதார மேம்பாட்டுப் பணியகம் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது: முகக் கவசத்தின் மீது துகள்களும் வேறு மாசுகளும் விழுவதைத் தடுப்பதற்காக, பேஸ் ஷீல்டையும் பயன்படுத்த பரிந்துரைக்கலாம். முகக்கவசத்துடன், பேஸ் ஷீல்ட் பாவனை, இருமலால் பாதிக்கப்பட்ட நோயாளிகளைப் பராமரிக்கும் சுகாதார பணியாளர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறையாகும். ஏனெனில், நோயாளிகளின் துகள்களால் சுகாதார பணியாளர்களின் முகக் கவசம் மாசுபடுவதால், அதிக ஆபத்து உள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

இருப்பினும், முகக் கவசத்துக்குப் பதிலாக பேஸ் ஷீல்ட் பாவனை மட்டும் ஒருவருக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்காததால் அதனை மட்டும் தனியாகப் பாவித்தல் பரிந்துரைக்கப்படவில்லை எனவும், முகக் கவசத்தை மட்டும் அணிவதன் மூலம் கொரோனா தொற்றிலிருந்து முழுமையான பாதுகாப்பு கிடைக்காது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால், ஒருவருக்கொருவர் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் தூரத்தை பேணல், சன நெரிசல் மிக்க இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்தல், கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல், முகக் கவசத்தை அணிதல் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் கொவிட் -19 பரவலைக் கட்டுப்படுத்தலாம்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களில்

# 142 பேர் கொரோனாவுக்குப் பலி

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, வெளிநாடுகளில் உள்ள 142 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல், தற்போது வரையிலேயே 142 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும், வெளிநாடுகளில் உள்ள 4,800 இலங்கையர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அப்பணியகம் தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளாகியிருந்த 4,800 பேரில் இதுவரையில் 4,600 பேர் குணமடைந்துள்ளதோடு மத்திய கிழக்கு நாடுகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம், பஹ்ரைன், குவைட், ஓமான், கட்டார் உள்ளிட்ட 16 நாடுகளில் வாழும் இலங்கையர்களே கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணமடைந்த அனைவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்து, தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மஹர, வெலிக்கடை சிறைச்சாலைகளில்

# ஐந்தாவது நாளாக நேற்றும் போராட்டம்

மரண தண்டனை விதிக்கப்பட்டு, மஹர, வெலிக்கடை சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் நேற்று (29) ஐந்தாவது நாளாகவும் தங்களது உணவுத் தவிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

மஹர சிறையில் உள்ள 75 கைதிகளும், வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள 105 கைதிகளுமே இவ்வாறு போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக தளர்த்துமாறு கோரியே இவர்கள் கடந்த ஐந்து நாள்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் கஷ்டப்படுவது

# அரசாங்கத்துக்கு தெரியாமலில்லை



தனியாக பாராளுமன்றம் வந்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க, அடுத்த முறை அரசாங்கத்தைக் கைப்பற்றலாமென நினைப்பதாகத் தெரிவிக்கும் அமைச்சர் காமினி லொக்குகே, நாட்டு மக்கள் பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்வது அரசாங்கத்துக்கு தெரியாமல் இல்லை எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் காமினி லொக்குகே, யதார்த்த நிலைமைகளைப் புரிந்துக்கொள்ளாது, விவசாயிகள் பல்வேறு இடங்களுக்குச் சென்று உரத் தட்டுப்பாடு தொடர்பில் போராட்டங்களை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்குப் புரியாமல் இல்லை. ஆனால் உலகம் முழுவதிலும் இதே பிரச்சினையே காணப்படுகிறது எனவும் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

எனினும், பலம்மிக்க அரசாங்கம் என்ற வகையில் இப்போராட்டங்களுக்கு அரசாங்கம் முகங்கொடுக்கும். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அடுத்த முறை தனக்கு வாக்குகள் கிடைக்குமென எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இதேபோல, தேசிய மக்கள் சக்தியும் தங்களுக்கு இல்லாதுபோயுள்ள ஆசனங்களை, அடுத்த தேர்தலில் பெற்றுக்கொள்ள முடியுமென எதிர்பார்க்கிறது எனவும் கூறினார்.

மறுபுறத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தனியாகப் பாராளுமன்றத்துக்கு வந்து, அடுத்த முறை அரசாங்கத்தைக் கைப்பற்றலாமென நினைக்கிறார் எனவும், ஆனால், யதார்த்தத்தைப் புரிந்துக்கொண்டு அரசாங்கம் நாட்டை நன்றாக நிர்வகித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கம் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தி வருவதால் எதிர்க்கட்சிக்கு பிரச்சினைகள் உருவாகியுள்ளன. கொரோனாவை வைத்து அரசியல் செய்ய முடியாத நிலை எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

ஜனாதிபதியின் உரையில்

# ‘நாட்டு மக்களுக்கு ஒன்றுமில்லை’



ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், நாட்டு மக்களுக்கு ஒன்றுமில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாட்டு மக்களுக்கான உரையில், கொரோனா வைரஸ் பாதிப்புகளுக்கு முகங்கொடுப்பது, அந்தப் பாதிப்புகளில் இருந்து, எவ்வாறு மீள்வது, நாட்டு மக்களை எவ்வாறு பாதுகாப்பது என எதிர்பார்க்கப்பட்ட எந்தவொரு விடயங்களையும் ஜனாதிபதி கூறவில்லை எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய 69 நிமிட உரையானது, அவருக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களை கௌரவப்படுத்துமென ஜனாதிபதி நினைத்துக் கொண்டிருக்கிறார். எரிபொருள்களின் விலை கூட 69 ரூபாயால் அதிகரிக்கப்பட்டிருந்தது எனவும் அவர் இதன் போது கூறினார்.




# அமைச்சரவை தீர்மானங்கள்

**01**. மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசிலுக்கான ஜப்பான் உதவித்திட்டத்தின் இவ்வருடம் செப்டெம்பர் மாதம் கற்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ள மாணவர் குழுக்களுக்காக 271 மில்லியன் ஜப்பான் யென் (அண்ணளவாக 488 மில்லியன் ரூபாய்) நிதியுதவியை வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் இணங்கியுள்ளது.

குறித்த புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொள்வதற்கான பரிமாற்றக் கடிதத்தை ஜப்பான் அரசாங்கத்துடன் கைச்சாத்திடுவதற்கும், குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் (JICA) ஒப்பந்தத்தை எட்டுவதற்காக நிதி அமைச்சராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**02**. சுற்றுலாத் துறையை வழக்கமான வகையில் பேணிச்செல்ல இயலாததுடன், குறித்த துறையில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் சலுகைகளை ஜூலை முதல் டிசெம்பர் இறுதி வரையில் நடைமுறைப்படுத்தும் வகையில் தொழில் உறவுகள் அமைச்சர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

**03**. வெலிக்கடை சிறைச்சாலையை மீள்கட்டமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பி.சீ.சீ. லங்கா கம்பனிக்குச் சொந்தமான காணியை மீள எடுத்தல்.

தற்போது வெலிக்கடை சிறைச்சாலையை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஹொரண பிரதேசத்தில் அமைந்துள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியில் மீளமைப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதற்கமைய நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்திற்கமைய குறித்த காணித்துண்டு பி.சீ. சீ. லங்கா கம்பனியின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**04**. சேதனப் உரப் பாவனையை அதிகரிப்பதற்காக விவசாயிகளிடையே அறிவை மேம்படுத்துவதற்கும், அது தொடர்பில் துரித விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய, விவசாயிகள், இளைஞர்கள் உள்ளிட்ட ஏனைய ஏற்புடைய தரப்பினர்களைத் தெளிவூட்டுவதற்காக ஒலி, ஒளி, அச்சு, டிஜிட்டல் ஊடகங்கள் வாயிலாக குறித்த விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**05**. எம்.வி. எக்ஸ்பிரஸ் - பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் இடம்பெற்றுள்ள கடல் மாசுறல் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தேவையான உடன்பாடுகளை வழங்குவதற்கும் சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக விருப்பம் தெரிவித்துள்ள நிறுவனங்களிடையே மிகவும் பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்காக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**06**. தானம் பெற்றுக் கொள்வதற்கு சிரமமாகவுள்ள பின்தங்கிய வணக்கஸ்தலங்களுக்காக தானம் வழங்குவதற்கு, சதொச லிமிட்டட் நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்படும் 5,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பொதிகளை, குறித்த நிறுவனத்தின் விநியோகப் பிரிவால் அடையாளம் காணப்பட்டுள்ள விகாரைகள், வணக்கத்தலங்களுக்கு விநியோகிப்பதற்கு பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**07**. அந்நிய செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 12 மாதங்களுக்கு அதிகமாக மீளவும் முதலிடப்படும் விசேட வைப்புக் கணக்குகளுக்காக மேலதிக வட்டி வீதத்தைச் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் இன்மையால், அதற்காக ஏற்பாடுகளை உள்வாங்கி 2017 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் 7(1) உறுப்புரைக்கமைய கட்டளையை வெளியிடுவதற்கும், குறித்த கட்டளைகளின் அங்கிகாரத்துக்காகப் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்காகவும் நிதி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**08**. குடிவரவு- குடியகல்வுத் திணைக்களத்தின் விசா வழங்கும் செயன்முறை தொடர்பாக தற்போதுள்ள விசா செல்லுபடியாகும் காலத்தைத் திருத்தம் செய்வதற்காக குடிவரவு குடியகல்வு சட்டத்தை திருத்தம் செய்வதற்கான ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அற்றோனி தத்துவத்தினை இரத்து செய்தல்

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் முருத்தலாவ, கூரியகொட இல. 339 எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 491322950V உடைய ரத்நாயக்க முதியன்சேலாகே நிஸ்ஸங்க ரத்நாயக்க ஆகிய நான் முருத்தலாவ, இலுக்தென்ன சந்திரசிறி வர்த்தக நிலையம் "மக்மால்" இல. 1/288 இல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 832794023V உடைய வாசல முதியன்சேலாகே எரங்க மக்மால் ராஜகருணா அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு என் கினிகம அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 08 ஜூலை 2016 ஆம் திகதியுடைய 2367 ஆம் இலக்க அற்றோனி தத்துவத்தினை இத்தால் இரத்து செய்கின்றேன் எனவும் அவ் அற்றோனி தத்துவக் காரரின் இதற்குப் பின்னரான எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மக்களுக்கு இத்தால் அறியப்படுத்துகின்றேன்.

ரத்நாயக்க முதியன்சேலாகே நிஸ்ஸங்க ரத்நாயக்க

# தீப்பந்தங்களுடன் வீதிக்கு வந்த ஜே.வி.பி

■ நூருள் ஹுதா உமர், ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் ஷிஹான், வி.ரி.சகாதேவராஜா



மக்கள் விடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள், அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களுடன் கண்டன தீப்பந்தப் போராட்டத்தை, கல்முனை நகரில் நேற்று முன்தினம் (28) இரவு முன்னெடுத்தனர்.

எரிபொருள், அரிசி உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து, "இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்" என்ற கோஷத்துடன் அவர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, "அமைச்சர்கள் சொகுசு வாகனங்களில்; அப்பாவி மக்கள் எண்ணெய்ச் சட்டிக்குள்", "போதும் போதும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்", "விலையை ஏற்றி ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு, ஜே.வி.பி ஆதரவாளர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த ஜே.வி.பியின் ஆதரவாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர்.

சுகாதார ஊழியர்களுக்கு கொரோனா;

# 'இக்கட்டான நிலையில் பணிகள் முன்னெடுப்பு'

## கல்முனை மாநகர மேயர் தெரிவிப்பு

■ அஸ்லம் எஸ்.மௌலானா, நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்



கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கல்முனை மாநகர சபையின் 29 சுகாதார ஊழியர்கள் உட்பட பெருந்தொகையானோர் கடமைக்குச் சமூகமளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகர மேயர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே திண்மக் கழிவகற்றல் சேவையையும் இதர பணிகளையும் முன்னெடுக்க வேண்டியிருப்பதாகவும் எனவே, பொதுமக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் கடமையாற்றுகின்ற நான்கு சுகாதாரத் தொழிலாளர்களும் பொறியியல் பிரிவில் ஓர் ஊழியரும், நிதிப் பிரிவில் ஓர் ஊழியருமாக ஆறு பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், இவர்களுடன் தொடர்புடைய பல ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்பாக, மாநகர மேயர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவைக்கு 150 சுகாதாரத் தொழிலாளர்கள் தேவையாக உள்ள நிலையில் 52 நிரந்தர ஊழியர்களும் 52 தற்காலிக ஊழியர்களுமாக 104 ஆளணியினரே எம்மிடம் உள்ளனர். இந்நிலையில், இவர்களுள் கொரோனா வைரஸ் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ள நான்கு சுகாதாரத் தொழிலாளர்கள் உட்பட தனிமைப்படுத்தப்பட்டோர் உள்ளடங்கலாக 29 சுகாதாரத் தொழிலாளர்களால் கடமைக்குச் சமூகமளிக்க முடியவில்லை. அவ்வாறே ஏனைய பிரிவுகளிலும் பலர் தனிமைப்படுத்தப்பட்டு, கடமைக்கு சமூகமளிக்க முடியாதிருக்கின்றனர். அத்துடன், கொரோனா வைரஸ் அபாய சூழல் காரணமாகச மாநகர சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானங்கள் யாவும் தடைப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு நிதி, ஆளணிப் பற்றாக்குறைகளுக்கு மத்தியிலேயே எமது மாநகர சபை திண்மக்கழிவகற்றல் சேவையையும் வடிகான், தெரு விளக்குப் பராமரிப்பு உள்ளிட்ட இதர பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது" என்றார்.

# 'அவர்களுக்கு வாகனம், மக்களுக்கு பட்டினி'

■ வ.சக்தி



மட்டக்களப்பு, போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் பொது இடங்களில் 'அவர்களுக்கு வாகனம்; மக்களுக்கு பட்டினி' எனும் தலைப்பிலான சுவரொட்டிகள், முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பெயரில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. 'எரிபொருள் விலைக்கு, பொருட்கள் விலைக்கு நிவாரணம் கொடு; வைரஸுக்குள் மறைந்து, மக்கள் சொத்தை விற்றுத் தின்பதை நிறுத்து' எனவும் இந்தச் சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தன.



# கடலாமையும் சுறாவும் இறந்து கரையொதுங்கின

■ வ.சக்தி, எஸ்.எம்.எம்.முர்ஷித், ஏ.எம்.முபாறக்

அண்மைக்காலமாக கிழக்கு கடற்கரையிலும் கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்ற நிலையில், கடலாமையும் சுறாவும் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

மட்டக்களப்பு, ஒந்தாச்சிமடம் கடற்கரையில் இறந்த நிலையில் நேற்று முன்தினம் (28) இரவு கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இதனை அவதானித்த கடற்கரையில் நின்றிருந்த பொதுமக்கள், இது தொடர்பில் வெல்லாவெளி வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, அங்கு விஜயம் செய்த வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கரையொதுங்கிய ஆமையைப் பார்வையிட்டு, பரிசோதனைகளுக்காக எடுத்துச் சென்றனர்.

இதேவேளை, திருகோணமலை - குச்சவெளி, கல்லராவ கடற்கரையில் 15 அடி நீளமுடைய சுறாவும் நேற்று (29) காலை இறந்த நிலையில் கரையொதுங்கியது.



# ரூ.170,000க்கு ஏலம் போன மீன்

■ பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்

அம்பாறை, சாய்ந்தமருது, முகத்துவார கடற்கரையில் எச்.எம் மர்சூக் என்பவருக்குச் சொந்தமான ஆழ்கடல் வள்ளத்தில் கடலுக்கு சென்ற மீனவர்கள், சுமார் 270 கிலோ கிராம் எடையுள்ள 'கொப்பூர்' மீன் ஒன்றை பிடித்து, நேற்று (29) கரைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

இந்த மீன் 170,000 ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சர் இன்று விஜயம்

■ ஏ.எம்.ஏ.பரீட்

கால்நடை வளங்கள், பால் - முட்டை சார்ந்த தொழிற்றுறை இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத், திருகோணமலை மாவட்டத்துக்கு இன்று (30) காலை விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இவ் விஜயத்தின் போது, திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலாளர் சமன் தர்சன பாண்டிகோரல தலைமையில் காலை 09 மணிக்கு விசேட கூட்டமொன்று, மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரள உட்பட பல அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, இக்குழுவினர் இராஜங்க அமைச்சருடன் காலை 10 மணிக்கு மொறவெவ பகுதிக்குச் சென்று கால்நடை பண்ணைக்கும் 11 மணிக்கு உப்புவெளியில் உள்ள கால்நடை பண்ணைக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

கடலட்டை பண்ணை விவகாரம்:

# 'பார்த்த பின்னரே முடிவு'

■ மு.தமிழ்ச்செல்வன்



வடக்கில், கடலட்டை வளர்ப்பதற்கு, கடந்த நல்லாட்சி அரசாங்கமே, சீன நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன், கௌதாரிமுனை பகுதிக்கு நேரில் வந்து நிலைமைகளை ஆராய்ததன் பின்னரே, தன்னால் இது குறித்து முடிவெடுக்க முடியுமென்றும், அவர் கூறினார்.

பூநகரி, கௌதாரிமுனை பகுதியில், சீன நிறுவனமொன்று சட்டவிரோதமாக கடலட்டை வளர்ப்பதாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில், வினவிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கடந்த நல்லாட்சி காலத்தில், அரியாலையில், சீன நிறுவனமொன்றுக்கு கடலட்டை வளர்ப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதாகவும் இதன் ஒரு பிரிவுதான் தற்போது கௌதாரிமுனையில் இயங்கி வருகிறதெனவும் கூறினார்.

சீன நிறுவனத்துடனான உடன்படிக்கையில், கௌதாரிமுனை மீனவர்கள் கையொப்பம் இட்டிருக்காவிட்டாலும், அவர்களுக்கு சீன நிறுவனம் தனிப்பட்ட ரீதியில் எதுவும் வழங்கியதா என்பது குறித்துத் தெரியாதெனவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த விவகாரத்தில், குழப்பமொன்று உள்ளதாகத் தெரிவித்த டக்ளஸ், இந்த கிழமைக்குள் தான் அங்கு வந்து நிலைமைகளை நேரில் பார்த்த பின்னரே தன்னால், இது குறித்து முடிவெடுக்க முடியுமெனவும் கூறினார். 'கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கங்களின் ஒத்துழைப்பில்லாமல் இங்கு கடலட்டைப் பண்ணையை ஆரம்பித்திருக்க முடியாது. பக்கத்துக் கிராம மக்களோ, இந்தப் பகுதி மக்களின் அனுமதியில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையில், இந்தப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றால், இந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினரதோ அல்லது அதன் ஒரு பகுதியினரதோ ஏதோவொரு விதமான அங்கிகாரம் வழங்கியிருந்திருக்க வேண்டும்' என்றும், அவர் கூறினார்.

கடலட்டை விவகாரம்:

# 'டக்ளஸ் மௌனம் காப்பது ஏன்?'

■ எஸ்.நிதர்ஷன்




"சீன நாட்டவரின் நடவடிக்கையைப் பார்த்தால், எங்கள் வீட்டு வாசலிலும் வந்து நிற்பார்கள் போல் தெரிகிறது" என்று, அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள்.ஜெயந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், வடமாகாணத்தில், சீனர்களின் கடலட்டை வளர்ப்பு தொடர்பில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மௌனம் காப்பது ஏன் எனவும், அவர் வினவினார்.

யாழ். ஊடக அமையத்தில், நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், அரியாலையில், கடல் அட்டை குஞ்சை வளர்த்து, அதை பூநகரி கடலில் வளர்ப்பதற்காக கொண்டுபோய் விடுகிறார்கள் என்றும் வெளிநாட்டவர் எமது கடலில் கடலட்டையை வளர்த்து, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி இருக்கிறது என்றால், எமது மக்களுக்கு ஏன் அந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனவும் வினவினார்.

இந்தியாவுக்கு எதிராக அறிக்கைகளை விடும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சீனாவின் அத்துமீறிய செயற்பாடுகளை கண்டும் காணாமல், மௌனம் காப்பது ஏன் என்று வினவிய அவர், ஆளுமையுடைய தமிழ்த் தலைவனாக இருந்தால், இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கூறினார்.

# யாழில் விசேட கலந்துரையாடல்

■ எஸ்.நிதர்ஷன்


யாழ்ப்பாண மாவட்டத்தில், பாடசாலை மாணவர்களுக்கான இணைய வழிக் கற்றலை விருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று, யாழ். மாவட்டச் செயலகத்தில், நேற்று (29) நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, இணைய வழியில் கற்றலை மேற்கொள்வதற்கு மாணவர்கள் மத்தியில் உள்ள பிரச்சினைகள், தொழில்நுட்ப விடயங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

உரிய தரப்புகளுடன் பேசி, உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது.

# நெல்லியடி பொலிஸார் நால்வருக்கு தொற்று



■ எம்.றொசாந்த்

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில், நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு, கொரோனா வைரஸ் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 34 உத்தியோகத்தர்களிடம், நேற்று முன்தினம் (28) அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே, அதில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாலையில்

# வெடிபொருள்கள் மீட்பு


■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, சாலைப் பகுதியில், நேற்று (29) கடற்படையினரால் வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன. இதன்போது, இரண்டு குண்டுகள், ஒரு கிளைமோர் குண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன என, முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்ற அனுமதியுடன் அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# கொரோனா செய்தி துளிகள்



01. பதுளை சதொச நிறுவனத்தில் பணிபுரிபவர்களுள் 9 பேர், புதிய தொற்றாளர்களாக நேற்று (29) அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.( பாலித ஆரியவன்ஸ)
02. பசறை சுகாதார பிரிவுக்குட்பட்ட கோணகலை, பங்குத் தோட்டம், கனவரல்ல- சி.வி.ஈ பிரிவு, டெமேரியா ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 20 பேருக்கு, நேற்று (29) தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எம்.செல்வராஜா)
03. மொனராகலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் (28) புதிதாக 47 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் இதுவரை 3,501 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (சுமணசிறி குணதிலக)
04. பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று (29) 39 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ரஞ்சித் ராஜபக்ஸ)

### கூடாரங்களைக் கைவிட்டு

# லயனில் குடியேற அழுத்தம்

## தோட்ட நிர்வாகத்தால் லெவண்ட் தோட்ட மக்கள் பரிதவிப்பு



■ ரா.கமல்

யட்டியாந்தோட்டை, லெவண்ட் தோட்டத்தில் கடந்த ஐந்தாம் திகதி பெய்த கடும் மழையால், தோட்ட லயன் குடியிருப்பு ஒன்று, மண்சரிவு எச்சரிக்கைக்கு உள்ளாகியது.

இதனால் 25 குடும்பங்களைச் சேர்ந்த 149 பேர், தோட்ட நிர்வாகத்தின் உதவியுடன் தற்காலிகக் கூடாரங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

எனினும், தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதால், அம்மக்களை பழைய லயன் குடியிருப்புகளுக்கே செல்லுமாறும், அவ்வாறு செல்லாதவர்களுக்கு தொழில் வழங்கப்படாதென்றும் நிர்வாகம் கடிதம் மூலம் அழுத்தம் விடுத்து வருகின்றது.

அம்மக்களுக்கு எதிராகத் தோட்ட நிர்வாகத்தால், யட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, இம்மக்கள் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டு உள்ள கூடாரங்கள் களணிவெலி பெருந்தோட்ட நிறுவனத்துக்குரிய இறப்பர் தோட்டமென்றும், இவ்வாறு அங்கு தற்காலிகமாக தங்கியுள்ள இடங்களில் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தே தோட்ட நிர்வாகம் அம்மக்களை ஆபத்து மிக்க லயன் குடியிருப்புக்கு செல்லுமாறு பணித்துள்ளது.

அந்தப் பிரதேசம் மண்சரிவு ஆபத்தற்ற பிரதேசமாக கேகாலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளரால் சான்று வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியே தோட்ட நிர்வாகம் அம்மக்களை பழைய இடங்களுக்கு செல்லுமாறு அழுத்தம் கொடுத்துவருகின்றது.

இந்த விடயம் தொடர்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் அண்ணாமலை பாஸ்கரனிடம் வினவியபோது, தோட்ட முகாமையாளருடன் கலந்துரையாடி, புதிய வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்படும் வரை, அம்மக்களை தற்காலிக இடங்களிலேயே வசிக்க அனுமதி வழங்கித் தருவதுடன், அவர்கள் தொழிலில் ஈடுபடவும் வாய்ப்புப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

### மூடப்பட்டுள்ள வைத்தியசாலையால்

# தும்பர மக்கள் அசௌகரியம்

■ மஹிந்தகுமார்




இரத்தினபுரி, தும்பர தோட்டத்தில் கடந்த ஒரு மாதமாக வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால், இத்தோட்ட மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

எனவே, தமக்கு நோய் ஏற்பட்டால், ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இங்கிரிய வைத்தியசாலைக்கே செல்ல வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், இந்த மாதம் மூன்றாம் திகதி பெய்த கடும் மழையால் அத்தோட்டத்தில் மண்சரிவு ஏற்படலாம் என தேசிய கட்டட ஆய்வு நிலையம் எச்சரிக்கை விடுத்ததையடுத்து, வைத்தியசாலையை மூட நேரிட்டதாக வைத்தியசாலை தரப்புகள் தெரிவிக்கின்றன. அதேவேளை, இத்தோட்ட மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு அண்மையில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், அங்கு மண்சரிவு ஏற்படுமென தேசிய கட்டட ஆய்வு நிலையம் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இதனால் தற்காலிகமாக பாடசாலையொன்றில் தங்கியிருந்த இம்மக்கள் மீண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்ட குடியிருப்புகளுக்கே சென்று வாழ்வதாகவும் தெரிவிக்கின்றனர்.



## கல்விக்காக மரம் ஏறும் மாணவர்கள்...

நிகழ்நிலை (இணையவழி) கற்கைக்காக, நாட்டின் பல பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் அலைபேசி சமிக்ஞை கிடைக்கும் இடங்களைத் தேடிச் செல்லும் நிலையில், மாத்தளை, பல்லேபொல பிரதேச மாணவர்கள் 25 அடி உயரமான மரங்களில் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.
(மஹேஸ் கீர்த்திரத்ன)

### மத்திய மாகாணத்தில்

# 647 கொரோனா மரணங்கள் பதிவு

■ மொஹமட் ஆஸிக்

மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் நேற்று (29) வரை 647 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதென, மத்திய மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கண்டி மாவட்டத்தில் இதுவரை 411 மரணங்களும் நுவரெலியா மாவட்டத்தில் 129 மரணங்களும் மாத்தளை மாவட்டத்தில் 107 மரணங்களும் பதிவாகியுள்ளன.

மேலும், கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் கண்டி மாவட்டத்தில் 8 மரணங்களும் மாத்தளை மாவட்டத்தில் 2 மரணங்களும் நுவரெலியா மாவட்டத்தில் ஒரு மரணமும் பதிவாகியுள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 'கம்பனிகளின் அடக்குமுறைக்குள் பெருந்தோட்டங்கள்'

■ ஆ.ரமேஸ்



காலனித்துவ ஆட்சியில் வெள்ளையர்களின் அடக்கு முறையிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட பெருந்தோட்டங்கள், இன்று கம்பனிகளின் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சுப்பையா சதாசிவம், இதனால் வாழ்வாதார தொழில், பொருளாதார பின்னடைவை தொழிலாளர்கள் சந்தித்துள்ளனர் என்றார்.

தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்காது தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளையும் கம்பனிகள் மீறி வருவதாக குற்றஞ்சுமத்திய அவர், தொழிற்சங்க அனுபவம் இல்லாதவர்களால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், அணுகுமுறைகள் காரணமாகவே தோட்டத்தொழிலாளர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

எனவே, தொழிலாளர்கள் அனுபவித்து வரும் கஷ்டத்தையும் அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும் தட்டிக்கேட்க அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், அப்போதுதான் கம்பனிக்காரர்களின் அராஜகப் போக்குகளுக்கு பாடம் புகட்ட முடியும் என்றார்.





# 40 ஏக்கர் வனப்பகுதி தீயால் நாசம்

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை நகருக்கு அண்மித்த அளுகொல்ல மலைப் பகுதியில் நேற்று முன்தினம் (28) இரவு ஏற்பட்ட தீப்பரவலால், 40 ஏக்கர் வனப்பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளது.

இதனையடுத்து, இராணுவம், பொலிஸார், பதுளை மாநகர சபையின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு என்பன இணைந்து, ஆறு மணித்தியாலங்களின் பின்னர், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனரென, பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஈ.எல்.எம். உதயகுமார தெரிவித்துள்ளார்.



### தொலைத்தொடர்பு கோபுரத்தின்

# மின்கலங்கள் திருட்டு

## விசாரணைகள் ஆரம்பம்

■ செ.தி. பெருமாள்

சாமிமலை, மல்லியப்பு தோட்டத்தில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் இணைக்கப்பட்டிருந்த 24 மின்கலங்கள் (பெற்றரிகள்) களவாடப்பட்டுள்ளதாக, மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் (28) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக, ஹட்டன் பிராந்திய தொலைத்தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்தடை ஏற்படும் போது, இக்கோபுரம் செயற்படுவதற்காக பொருத்தப்பட்டிருந்த மின்கலங்களே இவ்வாறு களவாடப்பட்டுள்ளதுடன், இவற்றின் பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆரியரத்ன பண்டாரவின் ஆலோசனையின் கீழ், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்துக்கு நேற்று (29) காலை கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

### பதுளை மாநகர சபையின்

# செயற்பாடுகள் மீள ஆரம்பம்

## புதிய வர்த்தமானி வெளியீடு

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை மாநகர சபையின் நடவடிக்கைகள், தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாகத் தெரிவித்து, கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்து, இச்சபையின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவித்து, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலால் நேற்று முன்தினம் (28) இரவு புதிய வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, பதுளை மாநகர சபையின் செயற்பாடுகள், நேற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஆணையாளரின் நிர்வாகமும் நேற்றிலிருந்து நிறைவுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபை மேயருக்கு சபையின் ஏனைய உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமை காரணமாக, சபையின் செயற்பாடுகளை இடைநிறுத்துவது தொடர்பான வர்த்தமானி, ஊவா மாகாண ஆளுநரால், பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.

தற்போது பல இணக்கப்பாடுகளுடன் நிலைமை மாறியுள்ளதால், புதிய தீர்மானம் எடுத்துள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

### மானை வேட்டையாட வந்த

# மலைப்பாம்பு பிடிபட்டது

■ வெய்யன்

பன்வில, பள்ளேகம ஜனஉதான கிராமத்தில், சுமார் 10 அடி மலைப்பாம்பொன்று, பிரதேச இளைஞர்களால் பிடிக்கப்பட்டு காட்டுப்பகுதியில் விடப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் விளையாடச் சென்ற போது, மான் ஒன்றின் சத்தத்தைக் கேட்டுள்ளனர்.

இதனையடுத்து மானை பாம்பிடமிருந்து மீட்டெடுத்ததுடன், பாம்பைப் பிடித்து, பன்வில பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

எனினும், அந்த இளைஞர்களிடமே பாம்மை ஒப்படைத்த பொலிஸார், பாம்பை காட்டுக்குள் விடுமாறு பணித்ததையடுத்து, பாம்பைக் காட்டில் விட்டுள்ளனர்.

# பிறழ்வு புரட்டிவிட்டுவிடும் என்பதால் தடுப்பூசி, முகக்கவசம் கட்டாயம்

இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் செலுத்திக்கொண்டு விட்டோம்; இனிமேல் தாங்கள் நினைத்ததைப்போல சுற்றித்திரியலாமென யாரும் கனவிலும் நினைத்துவிடக்கூடாது. முதல் மூன்று அலைகளின் போது, எவ்வாறான சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்தீர்களோ அதற்கு மேல் ஒரு படி சென்று, இன்னும் இறுக்கமாக 'அவற்றை'க் கடைப்பிடிக்க வேண்டும்.

மக்களிடையே இதுவரையிலும் பரவிய கொரோனா வைரஸ் வகைகளில், 'டெல்டா' வகையாக உருமாறிய கொரோனா வைரஸ்தான், அதிக வேகமும் ஆபத்தும் கொண்டதென, உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

கொரோனா வைரஸின் 'டெல்டா' உருமாற்றத் தொற்றுக்குள்ளான மேலும் மூவர் கொழும்பில் இனங்காணப்பட்டுள்ளனர். இது, எமக்கு விடுக்கப்பட்ட மிகவும் எச்சரிக்கையான சமிக்ஞைகளில் ஒன்றாகும்; ஆபத்தான சமிக்ஞையுமாகும்.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்வதன் ஊடாகவே, பிறழ்வு தொடர்பிலான உண்மையான நிலைமையைக் கண்டறியமுடியுமென, ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நீர்ப்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர், பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். அவருடைய கூற்றையும் மிக ஆழமாக நோக்கவேண்டும்.

இந்தப் புதிய மரபணு பிறழ்வால், உலக நாடுகள் பதறிக்கொண்டிருக்கின்றன. 'இரட்டை உருமாற்றம்' உள்ளிட்ட பல்வேறு வகைகளில், பிறழ்வுகள் உருமாறிக் கொண்டிருக்கின்றன என்பதால், மிகமிக அவதானமாக இருக்க வேண்டும்.

இந்தியாவில் உருவான 'டெல்டா' வைரஸ் மீண்டும் உருமாறி, 'டெல்டா பிளஸ்' வைரஸாகவும் பரவிவருகிறது என எச்சரித்துள்ள உலக சுகாதார அமைப்பு, இந்த 'டெல்டா' வைரஸ், 84 நாடுகளில் மிகவேகமாகப் பரவியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சமூகக் கட்டுப்பாடுகள் குறைவாக இருக்குமாயின், அதற்குள் புகுந்து பிறழ்வு புரட்டிப்போட்டுவிடும். அது, கடந்த காலங்களை விடவும் மிகக்கடினமான நிலைமையையே ஏற்படுத்திவிடும்.

நாடு முழுமையாகத் திறந்திருந்தாலும் எந்நேரத்திலும் மீண்டும் முடக்கப்பட்டு விடுமோ என்றொரு பேரச்சம் எழாமல் இல்லை. வாழ்க்கையை அச்சம் சூழ்கொண்டுவிட்டது; அன்றாடம் ஜீவியம் நடத்தினால் போதுமென்ற நினைப்பிலேயே சாதாரண மக்கள் இருக்கின்றனர்.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கும் அதன் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு நடந்தோமெனில், கொரோனா வைரஸையும் அதன் பிறழ்வுகளையும் வெற்றி கொள்வது, வெகு தொலைவில் இருக்காது. ஆனால், பலருக்கும் அது புரியவில்லை என்பது, கவலைக்கிடமாக உள்ளது.

கைகளை ஏன் கழுவவேண்டும், முகக்கவசம் அணிய வேண்டுமா எனக் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தவர்கள், அடிக்கொரு தடவை கைகளைக் கழுவுகின்றனர். ஒன்றுக்கு இரண்டு முகக் கவசங்களை அணிந்துகொள்கின்றனர். அவையிரண்டும் அன்றாட தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

பலரும் பல மாதங்களாக வீடுகளுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கின்றனர். இன்னும் சிலர், பயணக்கட்டுப்பாடுகள் காலங்களிலும் எவ்விதமான அத்தியாவசிய தேவைகளும் இன்றிச் சுற்றித்திரிந்தனர்; இன்னும் வெளியிலேயே சுற்றித்திரிகின்றனர்.

இன்னும் சிலர், தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வதன் மீதான ஆர்வத்தைக் காண்பிக்கின்றனர். ஏனையோரும், தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டு, கொரோனாவிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொண்டு, ஏனையோரையும் பாதுகாப்பதற்கு வழிசமைக்க வேண்டும். இல்லையேல், பிறழ்வு முழுநாட்டையும் புரட்டி, முடக்கிவிடும். அதன்பின்னர், சிந்திப்பதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை என்பதை மீளவும் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ஐரோப்பிய பிரேரணையும் கைதிகளின் விடுதலையும்



எம்.எஸ்.எம். ஐயூப்

ஐரோப்பிய நாடாளுமன்றம், ஜூன் 10 ஆம் திகதி, இலங்கை தொடர்பாக நிறைவேற்றிய பிரேரணை, இலங்கை அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது போலும்!

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்வதாகவும் எனவே, இலங்கைக்கு வழங்கும் ஜீ.எஸ்.பி வரிச் சலுகைகளை நிறுத்த வேண்டும் எனவும், அந்தப் பிரேரணை மூலம், ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்திருந்தது.

அது தொடர்பாக, ஐரோப்பிய ஆணைக்குழு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. நிலைமையைச் சீர்செய்வதற்காக, இலங்கைக்கு அவகாசம் கொடுத்துவிட்டே, ஐரோப்பிய ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும். அதற்குள் இலங்கை அரசாங்கம், அந்தப் பிரேரணையால் சற்றுப் பின்வாங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

அந்தப் பிரேரணையின் மூலம், ஐரோப்பிய நாடாளுமன்றம் முக்கிய சில விடயங்களை, இலங்கை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல், இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம், மோசமாகி வருவதாகக் குறிப்பிடும் அந்தப் பிரேரணையில் குறிப்பாக, முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரைக் கைது செய்து தடுத்து வைப்பதற்காக, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அரசாங்கம் திட்டமிட்டு பாவிக்கிறது எனக் குற்றஞ்சாட்டுகிறது.

அதிலும் முக்கியமாக, ஒரு வருடத்துக்கு முன்னர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாப் ஜஸீம் ஆகியோரின் பெயர்கள் அப்பிரேரணையில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தோடு, சிவில் சமூக ஆர்வலர்கள், சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு எதிராக, இலங்கை அரசாங்கம் அச்சட்டத்தைப் பாவிப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது.

வாய் மூலமாகவோ எழுத்து மூலமாகவோ, சமூகங்களுக்கிடையே வெறுப்பைத் தூண்டுவதாகச் சந்தேகிக்கப்படுவோர், வழக்கு விசாரணையின்றி மறுவாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்க, பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கும் வகையில், கடந்த மார்ச் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டார். ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரேரணையில், இதுவும் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயமாகும்.

பொதுவாக, கடந்த மார்ச் மாதம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அடிப்படையாகக் கொண்டே, ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரேரணை இருந்தபோதிலும், பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பற்றி, ஐரோப்பிய நாடாளுமன்றம் கூடுதலாகக் கவனம் செலுத்தியிருந்தது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், கடந்த ஒரு வருடத்துக்குள் சுமார் 100 பேர், சிறு குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அண்மையில் கூறியிருந்தார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதோடு, அரசாங்கத்தின் நிலைப்பாடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது நிலையானதா என்பது இன்னமும் தெளிவில்லை.

ஜூன் 23 ஆம் திகதி, பாராளுமன்றத்தில் உரையாற்றிய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஏதோ ஒரு புதிய விடயத்தைக் கண்டு பிடித்ததைப் போல், மிக நீண்ட காலமாகச் சில தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்றும் கூறினார். சில கைதிகளுக்கு, அவர்களுக்கு எதிராக எத்தகைய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்பதுகூடத் தெரியாது என்றும், 35 கைதிகள், தமக்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தை விட, நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு உள்ளதாகவும் 38 கைதிகளின் வழக்குகள், 20 வருடங்களுக்கு மேலாக மேல் நீதிமன்றங்களில் நீடித்துக் கொண்டு சென்றுள்ளதாகவும் சில கைதிகள் தமது (நாமலின்) வயதைப் (35) பார்க்கிலும் நீண்ட காலம் விளக்கமறியலில் உள்ளதாகவும் அவர் உரையாற்றியிருந்தார்.

இந்த விடயங்கள், ஏற்கெனவே தமிழ் எம்.பிக்களால், குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனால் பாராளுமன்றத்தில் பல முறை எடுத்துரைக்கப்பட்டவை ஆகும்.

ஆனால், தண்டனைக் காலத்தைப் பார்க்கிலும் நீண்ட காலமாக, ஒரு கைதி விளக்கமறியலில் வைக்கப்பட்டமையும் 20 வருடங்களாக சில வழக்குகள் நீடித்துச் சென்றுள்ளமையும் சில கைதிகள் நாமலின் வயதைப் பார்க்கிலும் நீண்ட காலமாக விளக்க மறியலில் வைக்கப்பட்டு உள்ளமையும் நியாயமல்ல என்பதை, நாமல் கூறிய போதே ஆளும் கட்சிக்கு விளங்கியிருக்கிறது; மற்றவர்கள் கூறிய போது விளங்கவில்லை.

அதேவேளை, இந்தக் கைதிகள் விளக்கமறியலில் இருந்த காலத்தில், ஐந்து வருடங்களுக்கு சற்று குறைந்த காலத்தைத் தவிர்ந்த மிகுதிக் காலத்தில், தற்போதைய ஆளும் கட்சியினரே வேறு கட்சிப் பெயரில் ஆட்சியில் இருந்தனர். அப்போது இவர்களுக்கு இந்த நீதி விளங்கவில்லை.

நாமல் இவ்வாறு கூறியபோது, உடனே எழுந்திருந்த நீதி அமைச்சர் அலி சப்ரி, "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை, சர்வதேச தரத்துக்கு அமையத் திருத்த, அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது" என்று கூறினார். இவை, பாராட்டக் கூடிய நடவடிக்கைகள் தான். ஆனால், இந்தத் தருணத்தில் அரசாங்கம், ஏன் இந்த நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதும் முக்கியமான விடயமாகும்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில், இந்தத் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, "பயங்கர புலிகளை அரசாங்கம் விடுதலை செய்யப் போகிறது" என, சிங்கள மக்களைக் குழப்ப, தற்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள், அப்போது முயன்றனர். அதன் காரணமாகத் தனித் தனி வழக்காக எடுத்து, தனித் தனியாகக் கைதிகளை விடுதலை செய்ய, நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

நல்லாட்சி அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை, சர்வதேச தரத்துக்கு அமைய, திருத்த நடவடிக்கை எடுத்த போது, பயங்கரவாதிகளுக்குச் சலுகை வழங்கப் போவதாக, தற்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் நாட்டைக் குழப்ப முயன்றனர். அதன் காரணமாக, அந்தப் பணியை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அந்தக் காலகட்டத்தில், நாமல் ராஜபக்ஷவைப் போல் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர், தமிழ்க் கைதிகளுக்காகப் பரிந்து பேசியிருந்தால் அவர், புலிகளின் ஏஜண்டாகவே முத்திரை குத்தப்பட்டு இருப்பார். இப்போது அவ்வாறு எவரும் முத்திரை குத்த முயற்சிக்கவில்லை.

ராஜபக்ஷர்கள் வழங்கினால், அது தமிழ் ஈழமாக இருந்தாலும், அதில் தவறில்லை என்று சிங்கள மக்களில் சிலர் ஏளனமாகக் கூறுவது, இப்போது ஞாபகம் வருகிறது.

அதேவேளை, ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரேரணையே, தற்போது இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்குக் காரணம் என்பதும் தெளிவாகிறது.

காரணம் எதுவாக இருந்தாலும், இந்த விடயத்தில் சிங்கள மக்கள் விளங்கிக் கொள்ளாதிருந்த ஒரு விடயத்தை, அவர்களுக்கு எடுத்து உரைத்தமையையிட்டு, நாமல் பாராட்டப்படத் தான் வேண்டும். கைதிகளின் நன்மைக்காக, அதன் பின்னாலுள்ள அரசியலைப் புறக்கணித்துவிடுவது நலம்!

தமிழ்க் கைதிகளில் 16 பேர், பொசன் போயா தினத்தில் (ஜூன் 24) விடுதலை செய்யப்பட்டனர். கைதிகளின் விவகாரம், பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்துவது ஆகியவற்றுப் புறம்பாக, சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்த்த ஜஸீம், இரகசியப் பொலிஸ் காவலில் இருந்து விளக்க மறியலுக்கு அனுப்பப்பட்டுள்ளார். ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரேரணையில் பெயர் குறிப்பிடப்பட்ட இரகசியப் பொலிஸின் முன்னாள் அத்தியட்சகர் ஷானி அபேசேகர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனவே தான், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரேரணை செயற்பட ஆரம்பித்துள்ளது என்று குறிப்பிட்டோம்.

இங்கு, எமக்கு எந்த வகையிலும் விளங்காத ஒரு விடயம் இருக்கிறது. இவ்வளவு நீண்ட காலமாகக் கைதிகளை வழக்கு விசாரணையின்றித் தடுத்து வைத்ததில், முன்னாள் அரசாங்கங்களும் இந்த அரசாங்கமும் என்ன இலாபத்தை அடைந்தன?

நியாயமற்ற சட்டமொன்றை, இவ்வளவு காலம் வைத்திருந்ததில், கடந்த காலத்தில் அரசாங்கங்கள் என்ன இலாபத்தை அடைந்தன? வழக்கு விசாரணையின்றி ஒருவரை, புனர்வாழ்வு முகாமுக்குள் அடைத்து வைப்பதில், ஓர் அரசாங்கம் என்ன இலாபத்தை அடையலாம்?

ஐரோப்பிய நாடாளுமன்றம் சுட்டிக் காட்டியிருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கு சிவில் நிறுவனங்களில் நியமனங்களை வழங்கும் விடயத்தால், என்ன இலாபம் இருக்கிறது? அவர்கள் எவரும் விசேட திறமைகளைக் காட்டவில்லை.

காணாமற்போனோருக்கான அலுவலகத்துக்கு, முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவரைத் தலைவராக நியமித்ததால் விசேட பயன் ஏதும் இருக்கிறதா? அவ்வாறு இல்லையாயின், சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் எச்சரிக்கைகளுக்கு இலக்காகும் வகையில், இந்த நடவடிக்கைகளை ஏன் எடுக்க வேண்டும்?

இவை எம்மால் விளங்கிக் கொள்ள முடியாத விடயங்களாகும்.



## வாழ்வியல் தரிசனம்

பொய் எதுவெனப் புரியவேண்டும்; மெய் எதுவெனத் தெளிதல் வேண்டும். இந்தக் கருதுகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள், எப்படியோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வாழும் வழி எதுவெனச் சொல்லிக் கொடுப்பவர்களின்றியே, நற்குணங்களுடன் வாழும் உத்தமர்கள் இருக்கிறார்கள். தங்களது பெற்றோர்களின் வழிப்படியே இத்தகையவர்கள், தங்களது வாழ்வைச் சீரோடும் சிறப்போடும் அமைத்துக் கொள்கிறார்கள்.

வீடுகள்கூட, தெய்வீகம் நிறைந்திருக்கும் கோவில்களாக அமைய வேண்டும். பெற்றோரின் நடத்தைகள் தூய்மையுடன் இருந்தால், எல்லா இல்லங்களிலும் அதிர்ஷ்டம், நிம்மதி, அறிவு, மேன்மை, ஞானம், பக்தி, பெரியோர் உறவுகள், அன்பு, ஈகை எல்லாமே கைக்கூடிவரும். எந்தக் கெட்டவர்களின் காற்றுக்கூட, அங்கு உள்நுழைய முடியாது பாதுகாக்கப்படும்.

இப்படிப்பட்ட மேன்மைகளுடன் வாழ்ந்த பரம்பரைகளைக் கண்டிருக்கின்றோம். இல்லத்தின் சுற்றாடல்களில் புனிதம் பேணப்படல் வேண்டும். புறச்சுத்தம் அகச்சுத்தத்துக்கு வழிகோலும்.

காலையில் எழுந்து காலைக்கடன் முடித்தவுடன், தெய்வ வழிபாட்டுடன் அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதிகாலைப் பொழுதில் தெளிந்த மனோநிலையில்: கற்ற கல்வி நிலைத்து நிற்கும். விளையாட்டு, பொழுதுபோக்கு, வீட்டுவேலை என அனைத்து நல்ல சீரிய பழக்கங்களையும் இளமையில் பழகி, வழக்கங்கள் ஆக்கிக்கொள்ளுதல் எங்கேயும் எப்போதும் சிறப்பைத்தரும். நல்ல குடும்பங்களால் பூமி சிறக்கின்றது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நாய்களிடம் இருந்து மாடுகளை காப்பாற்றுங்கள்

2018 ஆம் ஆண்டு, இரணைத்தீவில் மீள்குடியேறிய மக்கள், தங்களது கால் நடைகளை, அங்குள்ள நூற்றுக்கணக்கான நாய்களிடமிருந்து பாதுகாத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

1992ஆம் ஆண்டு, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த பின்னர், இடைப்பட்ட காலப்பகுதியில், தீவு முழுவதும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. தங்களால் விட்டுச் சென்ற மாடுகளில் எஞ்சிய மாடுகளை மீளவும் பெற்று வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், நூற்றுக்கான நாய்கள் பெரும் சவாலாகக் காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இந்த நாய்கள், கடற்படையினரால் வளர்க்கப்பட்டவை என்றும் கன்றுகளைக் கொன்று உண்பதாகவும் குறிப்பாக, மாடுகள் கன்றுகளை ஈன்றவுடன், உடனடியாகவே கொன்று தின்றுவிடுவதாகவும் தாங்கள் மீள்குடியேறிய பின்னர், தொடர்ச்சியாக இவை இடம்பெற்று வருவதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என எல்லோரிடமும் சொல்லியும் எவரும் இதுவரை கண்டுகொள்ளவில்லை என்றும் தங்களது வாழ்வாதாரத்தில் ஒன்றான கால்நடை வளர்ப்பை மீளவும் ஆரம்பிப்பதற்கு நாய்களைக் கட்டுப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-மு. தமிழ்ச்செல்வன்

டுவிட்டரில்


# இந்திய வரைபடம் தவறாகச் சித்திரிப்பு

இந்தியா

டுவிட்டர் நிறுவன இணைய தளத்தில் இந்திய வரைபடம் தவறாக சித்திரிக்கப்பட்டு இருப்பதாகக் கூறி, இந்தியாவின் தலைமை நிர்வாகி மணிஷ் மகேஷ்வரி, அம்ரிதா திரிபாதி மீது உத்தர பிரதேச மாநில பொலிஸில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவால் சர்ச்சைக்குரியதாக கருதப்படும் அந்த வரைபடத்தில், ஜம்மு-காஷ்மீர் பகுதி இந்தியாவுடன் அல்லாமல் தனியாக பிரித்துக்காட்டப்பட்டிருந்தது.

டுவிட்டர் இணையதளத்தின் 'ட்வீட் லைஃப்' என்ற பகுதியில் இந்த வரைபடம் இடம்பெற்றிருந்தது. எனினும், குறிப்பிட்ட பயனர் இதைச் சுட்டிக்காட்டி கருத்துப் பகிர்ந்த விவகாரம், சமூக ஊடகங்களில் வைரலான பின்னர், இந்த




வரைபடத்தை டுவிட்டர் நிறுவனம் நீக்கியிருக்கிறது.

இது தொடர்பாக, பஜ்ரங் தளம் என்ற வலதுசாரி அமைப்பின் தலைவர் பிரவீண் பாட்டி அளித்துள்ள புகாரில், 'உள்நோக்கத்துடன் கூடிய இந்தச் செயலைத் தேசத்துரோகமாகக் கருத வேண்டும்' என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், டுவிட்டர் நிர்வாகிகள் மீது, பகைமையை ஊக்குவிப்பது, சமூகங்கள் இடையே வெறுப்புணர்வைத் தூண்டுவது, தகவல் தொழில்நுட்ப சட்ட விதிகள் பிரிவுகள் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சென்னை

இந்தியர்களுக்குத் தடை;

## ரஜினிக்கு மட்டும் அனுமதி?





அமெரிக்கா செல்ல, இந்தியர்களுக்குத் தடை விதிக்கப்பட்ட நிலையில், ரஜினி மட்டும் சிகிச்சைக்காக சென்றது மர்மமாக உள்ளது என, நடிகை கஸ்தூரி கூறியுள்ளார்.

'அண்ணாத்த' படப்பிடிப்பை முடித்து, அமெரிக்காவுக்குச் சென்று சிகிச்சை மேற்கொள்ளத் திட்டமிட்ட ரஜினி, இதற்காக மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருந்தார். அனுமதி கிடைத்த நிலையில், ரஜினிக்கு சிகிச்சை நல்லபடியாக முடிந்துள்ளது. சில வாரம் ஓய்வுக்குப் பின்னர், இந்தியா திரும்ப உள்ளார்.

இந்நிலையில், ரஜினி அமெரிக்கா சென்றது குறித்து, நடிகை கஸ்தூரி, டுவிட்டரில் கேள்வி எழுப்பியுள்ளார். அவர் கூறியுள்ளதாவது: கொரோனா காரணமாக, இந்தியர்கள், மே மாதம் முதல், நேரடியாக அமெரிக்கா செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எப்படி இந்த நேரத்தில் ரஜினி பயணம் செய்தார்? அவர் அரசியலில் இருந்து விலகியது உள்ளிட்ட எதுவும் சரியாகப்படவில்லை. இதை ரஜினி தான் தெளிவுபடுத்த வேண்டும். அமெரிக்காவில் பணிபுரியும் இந்தியர்கள் அல்லது படிப்பவர்கள் மட்டும், அமெரிக்கா திரும்ப அனுமதிக்கப்படுகிறது. அதுவும் மற்ற நாடுகளின் வழியே தான் அனுமதி கிடைக்கிறது.

இந்தியாவில் சிறந்த மருத்துவமனைகள் உள்ள நிலையில், ரஜினிக்கு சிகிச்சை தர முடியாத அளவுக்கு என்ன பாதிப்பு உள்ளது என்பதையும் அவர் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மதுரை

'ஜெய்ஹிந்த்' விவகாரம்;

## 'மன்னிப்பு கேட்க வேண்டும்'





தமிழக சட்ட சபையில் 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தையை அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொது செயலாளரும், திருச்செங்கோடு எம்.எல்.ஏவுமான ஈஸ்வரன், பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தப்படும் என அகில இந்திய பார்வர்ட் பிளாக் மாநில தலைவர் முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: ஆளுநர் உரையில் கடந்தாண்டு இடம் பெற்றிருந்த 'ஜெய்ஹிந்த்' வார்த்தை இந்தாண்டு இடம் பெறவில்லை. இதுவே தற்போதைய ஆட்சியில் தமிழகம் தலைநிமிர்ந்து உள்ளது என காட்டுகிறது என்ற ஈஸ்வரனின் பேச்சு நாடு முழுவதும் தாய் நாட்டுப்பற்றுடன் வாழும் மக்களுக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. 'ஜெய்ஹிந்த்' என்ற சொல் தமிழக சுதந்திர போராட்ட வீரர் செண்பகராமன் பிள்ளையால் முதன் முதலில் உச்சரிக்கப்பட்ட வார்த்தை. இதற்கு 'வெல்க இந்தியா' எனப் பொருள். இது ஈஸ்வரனுக்கு தெரியுமா?

தேச விடுதலைக்காகப் போராடிய சுபாஷ் சந்திரபோஸ் விடுதலைப் போராட்டக் களத்தில் மக்களிடம் உத்வேகத்தை ஏற்படுத்த பயன்படுத்திய சொல், 'ஜெய்ஹிந்த்'. பாடசாலை மாணவர்கள் முதல் இராணுவ வீரர்கள் வரை தினமும் உச்சரிக்கும் தேசபற்றுக்கான தாரகமந்திரம் இது. இதைக் குறிப்பிட்ட இனத்துக்கான அடையாளமாகவோ மொழியினருக்கான பாகுபாடாகவோ கருத முடியாது என்றார்.

சென்னை

சர்ச்சைக்குரிய கட்டுரை

## வாபஸ் பெற்றார் வைரமுத்து



'ஆண்டாள்' குறித்து சர்ச்சைக்குரிய கட்டுரை வெளியிட்டதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை இரத்துச் செய்ய கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை பாடலாசியர் வைரமுத்து வாபஸ் பெற்றுக் கொண்டார்.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி, தமிழை 'ஆண்டாள்' என்ற தலைப்பில் பாடலாசிரியர் வைரமுத்து, தமிழ் நாளிதழில் கட்டுரை எழுதியிருந்தார். அதில், பெண் தெய்வம் ஆண்டாள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்துகளைப் பதிவு செய்துள்ளதாக கூறி, அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, சமுதாய நல்லிணக்க பேரவையைச் சார்ந்த முருகானந்தம் என்பவர் சென்னை, கொளத்தூர் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்.


இந்தப் புகாரின் அடிப்படையில், தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, இரத்துச் செய்யக் கோரி, பாடலாசிரியர் வைரமுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 2017ஆம் ஆண்டு மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், 'ஆண்டாள்' குறித்த கருத்து, தன்னுடைய கருத்து அல்ல எனவும், அமெரிக்க எழுத்தாளர் கருத்தைத் தாம் சுட்டிகாட்டி இருந்ததாகவும் தவறான கருத்துகளைக் குறிப்பிடவில்லை எனவும், மத உணர்வுகளை புண்படுத்தும் விதமாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை எனவும் அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார். இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், வைரமுத்துவுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தது.

சென்னை

முன்னாள் அமைச்சர் மணிகண்டன்

## புழல் சிறைக்கு மாற்றம்



நடிகை சாந்தினி அளித்த புகாரில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மணிகண்டன், சைதாப்பேட்டை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த சிறைச்சாலையில், சொகுசு வசதிகளோடு இருந்தமை பொலிஸார் நடத்திய சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, சைதாப்பேட்டை சிறையில் இருந்து மணிகண்டன் புழல் சிறைக்கு மாற்றப்பட்டார்.

மேலும், மணிகண்டனுக்கு சொகுசு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்த சிறைக் காவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வடமராட்சிக்கு உலருணவு







தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், வடமராட்சியில் இமையாணன், அல்வாய் மேற்கு, துன்னாலை, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 250 குடும்பங்களுக்கு, அரிசி, கோதுமை மா, பருப்பு, சோயா மீற், சீனி, பால்மா, தேயிலை ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய உலர் உணவுப் பொதிகளை வழங்கியது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

## திருகோணமலை ரொட்டரிக் கழகம் நகராட்சி மன்றத்துக்கு உதவி



திருகோணமலை ரொட்டரிக் கழகத்தால் திருகோணமலை நகராட்சி மன்ற சுகாதார மற்றும் வேலைப்பகுதி ஊழியர்களின் நலன் கருதி, 100 சோடி கையுறை, 2,450 முகக்கவசம், 100 தொற்று நோய் பாதுகாப்பு மேலங்கிகள் ஆகியவற்றை நகராட்சி மன்றத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. நகராட்சி மன்றத்தின் தவிசாளர் ந. இராசநாயகம் உட்பட, ரொட்டரி கழக பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகி இருந்தனர்.

பொன் ஆனந்தம்

## மாவடிச்சேனை அனர்த்த நிவாரண குழு உதவி









மட்டக்களப்பு, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் மாவடிச்சேனை கிராமத்தில், 'மாவடிச்சேனை அனர்த்த நிவாரண குழு' என்ற பெயரில், பிரதேசத்தில் உள்ள பள்ளிவாயல்கள், விளையாட்டு கழகங்கள், சமூக மட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து, மாவடிச்சேனை பிரதேசத்தில் உள்ள கூலித் தொழிலாளர்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்குமாக 1,150 குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2,100 ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எம்.எம். அஹமட் அனாம்

## கல்லாறு கிராமத்தில் 100 குடும்பங்களுக்கு உலருணவு





கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புன்னைநீராவி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கல்லாறு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு, தலா 2,000 ரூபாய் பெறுமதியான உலருணவு பொதிகள், நளின் இன்போமேசன் ரெக்னோலஜி நிறுவனத்தின் உரிமையாளர் ரஞ்ஜீவால் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம சேவையாளர் அஜித் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன், 572 படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் நிசாந்த, நிறுவன உரிமையாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## குடாகம சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு உலர் உணவு





ஹட்டன், குடாகம பகுதியில் சுமைதூக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஸ்ணன் ஊடாகவும் மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் ஊடாகவும் கையளிக்கப்பட்டன.

நீலமேகம் பிரசாந்த்

## கம்மடுவ, நாகலை, இங்குருவத்தை, ஒப்பல்கல பகுதிகளுக்கு நிவாரணம்








மாத்தளை, அம்பங்கங்கை கோரளை பிரதேச சபைக்கு உட்பட்ட கம்மடுவ, நாகலை, இங்குருவத்தை, ஒப்பல்கல போன்ற பகுதிகளுக்கு வர்த்தகர் கமலக்குமார், அப்பகுதி வாழ் மக்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார். அம்பங்கங்கை கோரளை பிரதேச சபை தலைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

ஜயகுமார் ஷான்

எதியோப்பியா

# மெகெல்லேயில் நிலைமை சுமூகம்

## யுத்தநிறுத்தத்தை அறிவித்த அரசாங்கம்



எதியோப்பியாவின் திக்ரே பிராந்தியத் தலைநகரான மெகெல்லேயை மீண்டும் கட்டுப்படுத்துவதாக அப்பிராந்தியத்தின் முன்னாள் ஆட்சியாளர்கள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

ஏறத்தாழ எட்டு மாத மோதல்களின் பின்னரே குறித்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தமொன்றை குறித்த ஆட்சியாளர்களை வெளியேற்றிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இதேவேளை, போராளிப் படைகளை மெகெல்லேயிலிருந்து கடந்தாண்டு நவம்பரில் அவர்கள் அரசாங்கப் படைகளால் துரத்தப்பட்ட பின்னர் முதல் தடவையாக கண்டுள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கப் படைகளுக்கும், திக்ரேயின் முன்னாள் ஆளுங் கட்சியான திக்ரே மக்களின் விடுதலை முன்னணிக்குமிடையே மெகெல்லேக்கு வெளியே மோதல் அதிகரிப்பதான அறிக்கைகளைத் தொடர்ந்தே இந்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

## கைவிடப்பட்ட பாலகன்...



மூச்சடைப்பான நிலைமைகளில், ஏறத்தாழ 100 அகதிகளைக் கொண்டு சென்ற சனநெருக்கடியான ட்ரக்கொன்றுக்கு அருகில், ஏறத்தாழ இரண்டு வயதுடைய சிறுவனை, மெக்ஸிக்கன் அதிகாரிகள் நேற்று முன்தினம் கண்டுபிடித்துள்ளனர் என, அந்நாட்டு தேசிய குடியேற்ற முகவரகம் தெரிவித்துள்ளது.

சிரியா

# ஐ. அமெரிக்க படைகள் மீது தாக்குதல்



சிரியாவில் ஐக்கிய அமெரிக்கப் படைகள் நேற்று முன்தினம் றொக்கெட் தாக்குதல்களுக்கு உள்ளாகியபோதும் காயமில்லாமல் தப்பியுள்ளன.

இந்நிலையில், நிலைகளின் மீது ஏவப்பட்ட றொக்கெட்டுகளுக்கு பதிலாக, ஏவப்பட்ட நிலைகள் மீது ஐ. அமெரிக்க படைகள் தற்பாதுகாப்புக்காகப் பதில் தாக்குதல் நடத்தியதாக ஐ. அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கேணல் வெய்ன் மரோட்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சேதம் ஆராயப்படுவதாக மரோட்டா மேலும் கூறியுள்ளதோடு, ஐ. அமெரிக்க படைகள் மீது யார் தாக்குதல் நடத்தினர் என தெரிவித்திருக்கவில்லை.

இந்நிலையில், ஐ. அமெரிக்க படைகளால் ஆதரிக்கப்படுகின்ற சிரிய ஜனநாயகப் படைகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற அல் ஓமர் எண்ணெய் வயல் பகுதி மீது ஈரானிய ஆதரவு ஆயுதக் குழு ஒன்று சில ஆட்லறி ஏவுகணைகளை ஏவியதாக கிழக்கு சிரியாவின் டெய்ர் அல் ஸோரிலுள்ள தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சிரிய - ஈராக் எல்லையில், கடைப் சயீட் அல்-ஷுஹாடா பிரிவின் கொல்லப்பட்ட நான்கு உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட்டுள்ள ஈரானுடன் இணைந்த ஈராக்கிய ஆயுதக்குழுக்கள், பதிலடி நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளன.

மெக்ஸிக்கோ

# 'கஞ்சா பயன்பாட்டை சட்டரீதியாக்க வேண்டும்'




பொழுதுபோக்கு கஞ்சா பயன்பாட்டை மெக்ஸிக்கன் அரசாங்கமும், காங்கிரஸும் சட்ட ரீதியாக்க வேண்டும் என அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், பொழுதுபோக்கு பயன்பாட்டுக்காக கஞ்சாவை உள்ளெடுப்பது தொடர்பான செயற்பாடுகளை சுகாதார அமைச்சு அங்கிகரிக்க வேண்டும் என்ற சட்டத் தடையை மேற்படி பிரகடனம் நீக்கியுள்ளதாக, அறிக்கையொன்றில் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 18 வயதுக்கு மேற்பட்டவர்களே கஞ்சாவை வளர்க்க, கொண்டு செல்ல, உள்ளெடுக்க முடியும் என உச்ச நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

சுவீடன்

# இராஜினாமா செய்த பிரதமர் லூஃபியன்




சுவீடன் பிரதமர் ஸ்டியஃபான் லூஃபியன் நேற்று முன்தினம் இராஜினாமா செய்துள்ளார்.

அந்தவகையில், புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பொறுப்பை சுவீடன் பாராளுமன்றத்தின் சபாநாயகர் அன்ட்றியாஸ் நொர்லென்னிடம் லூஃபியன் கையளித்துள்ளார். இந்நிலையில், புதிய பிரதமர் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்கு நான்கு சந்தர்ப்பங்களை நொர்லென் கொண்டுள்ளார். அவர் அவ்வாறு தவறும் பட்சத்தில் இடைத் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும்.

இதேவேளை, வழமையான தேர்தலானது அடுத்தாண்டு செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ளது.

யூரோ கிண்ணத் தொடர்:

# குரோஷியாவை வென்று காலிறுதியில் ஸ்பெய்ன்



யூரோ கிண்ணத் தொடரிலிருந்து சுவிற்ஸர்லாந்தால் பிரான்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளது.

றோமானியாவில் நேற்று அதிகாலை நடைபெற்ற சுவிற்ஸர்லாந்துடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 4-5 என்ற ரீதியில் பெனால்டியில் தோற்றே தொடரிலிருந்து பிரான்ஸ் வெளியேறியுள்ளது.

அந்தவகையில், காலிறுதிப் போட்டிக்கு சுவிற்ஸர்லாந்து முன்னேறியுள்ளது.

பிரான்ஸ் சார்பாக கிலியான் மப்பேயே பெனால்டியைத் தவறவிட்டிருந்தார்.

வழமையான நேரத்தில் 3-3 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. பிரான்ஸ் சார்பாக கரிம் பென்ஸீமா இரண்டு கோல்களையும், போல் பொக்பா ஒரு கோலையும் பெற்றிருந்தனர். சுவிற்ஸர்லாந்து சார்பாக, ஹரிஸ் செஃபெரோவிச் இரண்டு கோல்களையும், மரியோ கவ்ரோனோவிச் ஒரு கோலையும் பெற்றிருந்தனர்.

பின்னர் மேலதிக நேரத்தில் எதுவித கோல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை, டென்மார்க்கில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குரோஷியாவுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 5-3 என்ற கோல் கணக்கில் மேலதிக நேரத்தில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு ஸ்பெய்ன் தகுதி பெற்றிருந்தது.

ஸ்பெய்ன் சார்பாக, பப்லோ சரபியா, சீஸர் அத்பிலிகெட்டா, பெரன் டொரஸ், அல்வரோ மொராட்டா, மிகேல் ஒயர்ஸ்பல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். குரோஷியா சார்பாக, மிஸ்லவ் ஒரிசிச், மரியோ பஸ்காலிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

வழமையான நேரத்தில் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் போட்டி காணப்பட்டிருந்ததுடன், மொராட்டாவும், ஒயர்ஸ்பல்லும் மேலதிக நேரத்திலேயே கோல்களைப் பெற்றிருந்தனர்.

விம்பிள்டன் டென்னிஸ் தொடர்:

# வெளியேற்றப்பட்ட சிட்டிபாஸ், குவிற்றோவா



பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமான விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து, அன்றைய முதல் நாளிலேயே உலகின் நான்காம் நிலை வீரரான ஸ்டெபனோஸ் சிட்டிபாஸ், 10ஆம் நிலை வீராங்கனையான பெற்றா குவித்தோவா ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தனது முதலாவது சுற்றுப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் பிரான்ஸிஸ் தியஃபோவை எதிர்கொண்ட கிரேக்கத்தின் சிட்டிபாஸ், 4-6, 4-6, 3-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து வெளியேறினார்.

இந்நிலையில், தனது முதலாவது சுற்றுப் போட்டியில், ஐ. அமெரிக்காவின் ஸ்லோனே ஸ்டீவன்ஸை எதிர்கொண்ட செக் குடியரசின் குவித்தோவா, 3-6, 4-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

# ஐ.அ. அமீரகத்தில் உலகக் கிண்ணம்





இவ்வாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரானது ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும் என உறுப்புச் சங்கங்களுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. இந்நிலையில், உலகக் கிண்ணத்தின் முதலாவது சுற்றுப் போட்டிகளின் இரண்டு குழுக்களுக்குமானவை ஐ.அ. அமீரகத்திலும், ஓமானிலும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, சுப்பர் 12 போட்டிகள் ஐ.அ. அமீரகத்தின் டுபாய், அபு தாபி, ஷார்ஜாவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இணைய விரைவு சதுரங்கப் போட்டி;

# யாழை வென்ற களுத்துறை




■ எஸ். ஜெயரட்ணம்

யாழ். சதுரங்க விளையாட்டுக் கழகம், களுத்துறை சுப்பர் பைட்டர் சதுரங்க விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கு இடையிலான சிநேகபூர்வ இணைய விரைவு சதுரங்கப் போட்டியில் சுப்பர் பைட்டர் வென்றது.

இந்த கொரோனா பெருந் தொற்று காலங்களில் சதுரங்க விளையாட்டு வீரர்களிடையே காணப்படும் மன உளைச்சலை போக்கி சுறுசுறுப்பாக அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் இரு கழகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வுகளை வளர்த்துக் கொள்ளும் நோக்கிலும் மேற்படி போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

சுப்பர் பைட்டர் சதுரங்க விளையாட்டுக் கழகம் இணையம் மூலம் வெற்றிகரமாக ஏற்பாடு செய்த ஏழு சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியில் தினோத் அபேரத்ன 7/7 புள்ளிகளைப் பெற்று ஆண்கள் பிரிவில் வென்றார். இரண்டாமிடத்தை யாழ். சதுரங்க விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த டி. அன்பரசன் கைப்பற்றினர்.

பெண்கள் பிரிவில் பியூமி உத்பலா 4/6 மதிப்பெண்களுடன் அதி சிறந்த வீராங்கனையாகவும், யாழ். சதுரங்க விளையாட்டு கழகத்தின் வைஷ்ணவி சிவாஸ்கரன் அதி சிறந்த இரண்டாம் நிலை வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 30 ஜூன் 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.